


# "மறுக்கப்படும் உரிமைகளை மீட்பதற்கான போராட்டம்!"

**கழக இளைஞர் அணி நடத்திய 'தி.மு.க 75 அறிவுத்திருவிழா' நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற 'இருவண்ணக்கொடிக்கு வயது 75' கருத்தரங்கத்தின் மூன்றாம் அமர்வுக்குத் தலைமை தாங்கி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் ஆற்றிய உரை:**



**தங்கம் தென்னரசு**
**நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்**

### இளமையான தமிழ்

இருவண்ணக் கொடிக்கு வயது 75 என்று சொன்னால், இந்தக் கொடியைத் தாங்கி நிற்கும் நம் கழகத்தின் வயதையே குறிக்கிறது. வயது ஏறினாலும், இளமையாக இருப்பது என்பது தமிழ்நாட்டில் மிகச் சில விஷயங்களுக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது. நம் உயிரென இருக்கும் தமிழ்மொழிக்கு 'இதுதான் வயது' என அறுதியிட்டுச் சொல்ல இயலாது. 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி' இது.

'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்' என்று சொல்கிறோமே, அதுபோல 'இதுதான் இதன் வயது' என்று அறுதிவிட்டு சொல்ல முடியாத ஒரு மொழி நம்முடைய மொழி. 'நாகரிகத்தின் தொட்டில்' என்று அறியக்கூடிய கீழடியின் காலத்திலேயே எழுதப் படிக்கத் தெரிந்த மொழி நம்முடையது என்று சொன்னாலும், இன்றைக்கும் இளமை குன்றாத ஒரு மொழி. வயது ஏற ஏற இளமை திரும்புவது என்னும் தன்மை தமிழுக்கு எப்படி இருக்கிறதோ, அதேபோல, இளமை பெற்றிருக்கக்கூடிய இயக்கம் இந்தியாவில் இருக்கிறது என்றால், அது 75 வயதையும் தாண்டி இளமையோடு இருக்கக்கூடிய நம் திராவிட முன்னேற்றக் கழகமே ஆகும்.





### தலைவரின் உழைப்பு

75 ஆண்டுகளான இந்த இருவண்ணக் கொடி இன்றைக்கும் இளமையோடு இருக்கின்ற காரணத்தினால்தான், இந்த விழாவைக் கூட, இந்த தலைப்பில் தாய்க்கழகம் நடத்தாமல், இளைஞர் அணி நடத்துவது சாலப் பொருத்தமாக அமைகிறது.

தமிழ்நாட்டிலே மூலைமுடுக்கெல்லாம் தலைவருடைய காலடி படாத கிராமங்களே இல்லை என்று சொல்லலாம். அதற்குக் காரணம், அத்தனை கிராமங்களிலும் அவருடைய கையால் ஏற்றப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் இருவண்ணக் கொடிகள் பறந்துகொண்டிருக்கின்றமையே ஆகும். 80களில் அவர் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து, கொடியை ஏற்றிவைக்கும் பணியைச் செய்த காரணத்தால் தான், தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் இந்தக் கழகத்தின் இருவண்ணக் கொடி இன்றைக்கும் பறக்கிறது.

### நான்கு தலைமுறைகள்

நான்கு தலைமுறைகளாக நாம் ஏற்றிவைத்த கொடிதான், இன்றைக்கும் தமிழ்நாட்டில் பட்டொளி வீசி பறந்துகொண்டிருக்கிறது. அந்த நான்கு தலைமுறை கொடி - சமூக நீதிக்கான கொடி, சமத்துவத்திற்கான கொடி, சமதர்மத்திற்கான கொடி.

இன்றளவும் திராவிடத்தின் கொள்கைகளை ஏந்திக் கொண்டிருக்கும் அந்தக் கொடியை, இந்தக் கழகத்தின் கொள்கைகளையும் இலட்சியத்தையும், வரக்கூடிய இளந்தலைமுறைக்கும், எதிர்காலத் தலைமுறைக்கும் கடத்த வேண்டும் எனும் உயரிய நோக்கத்தோடு, இன்றைக்கு ஏந்திக்கொண்டிருப்பவரே நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர், நம்மையெல்லாம் வழிநடத்தக்கூடிய அன்பிற்குரிய அருமைத் தம்பி உதயநிதி அவர்கள்.

இந்த அமர்வில் பேசவிருக்கும் மூன்று முக்கியமான தலைப்புகள் 'கட்டை விரலைக் கேட்டால் பட்டை உரியும்', 'ஆலயம் என்ன அவர்கள் சொத்தா?' மற்றும் மாநில சுயாட்சி குறித்த தலைப்பு. இந்த மூன்று தலைப்புகளுக்குமான பொதுவான ஒற்றுமை என்னவென்றால், இந்த மூன்று தலைப்புகளுமே மறுதலிப்பு (REFUSAL) எனும் அடிப்படையில் அமைந்தவை.

### உரிமைக்குரல்

எனக்குரிய ஒன்றை நான் கேட்கும்போது, நீ 'இல்லை' என்று மறுக்கிறாய் என்று சொன்னால், அந்த மறுப்பில் முதலில் தோன்றக்கூடிய மனக்குமுறல், அது உரிமைக்குரலாக மாறுகிறதல்லவா? அந்த உரிமைக் குரலின் சங்கநாதம்தான் இந்த மூன்று தலைப்புகளுக்கும் அடிப்படையாக இருக்கிறது.

* "கட்டை விரலை கேட்டால் பட்டை உரியும்" என்பதன் அடிநாதம் என்ன? உனக்குக் கல்வி கொடுக்க மாட்டேன், நீ கல்வி கற்பதற்குத் தகுதி இல்லாதவன் என்று மறுக்கிறீர்கள். உனக்குரிய கல்வியை நீ கற்பதற்கு உரிமை இல்லை. கல்வி கற்பதற்கும் ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்குத் தான் உரிமை உண்டு என்று சொல்லும் போது, நம் அடிப்படை உரிமை மறுக்கப்படுகிறது. அங்கே உரிமைக் குரல் பிறக்கிறது. கட்டை விரலை நீங்கள் அன்றைக்குக் கேட்டபோது, கண்ணை மூடிக்கொண்டு குருதட்சணையாகக் கொடுத்தோம். ஆனால், இன்றைக்குக் கேட்பீர் என்றால், உங்கள் பட்டை உரியும்! அந்தக் கலைஞருடைய வரிகளை, அந்த உணர்வை இன்றைக்குப் பெற்றிருக்கிறோம் என்கின்ற வகையில் தம்பி ராஜீவ் காந்தி அவர்கள் அதைப் பற்றி உரையாற்றவிருக்கிறார்.

### ஆலயம் நுழைய உரிமை

'ஆலயம் என்ன அவர்கள் சொத்தா?' - ஆலயத்திற்குள்ளே செல்வதற்கு நமக்கு அனுமதி மறுக்கப்பட்ட காலம் ஒன்று உண்டு. 'அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம், பெரியாருடைய நெஞ்சில் இருந்த முள்ளை நான் எடுக்கிறேன்' என்று கலைஞர் சொன்னார். அந்த கால வரையறையை நீங்கள் எடுத்து கொண்டால், 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இருந்து தொடங்கலாம். நான் மற்றும் தம்பி ராஜீவ்காந்தியின் மாவட்டமான ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், கமுதியில் உள்ள கோவிலுக்குள் நுழைவதற்கு அந்தப் பகுதி மக்கள் 19-ஆம் நூற்றாண்டில் போராடி இருக்கிறார்கள். அதைத்தொடர்ந்து மதுரை மற்றும் மயிலாடுதுறை போன்ற ஊர்களிலும் கோவிலுக்குள் நுழைவதற்கு மக்கள் போராடினார்கள். இப்படி ஒவ்வொரு கோவிலிலும் ஆலய நுழைவுப் போராட்டம் நடத்தி அதற்கான உரிமையை நாம் பெற்றிருக்கிறோம். நாம் கேட்பதெல்லாம் 'ஆலயங்கள் என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்றாகத்தானே இருக்க வேண்டும், அந்த ஆலயங்கள் எல்லாம் ஏன் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் தனியுடைமையாகப் போனது?' என்பதுதான். இந்தக் கேள்விக்கு விடையாகத்தான் நம் அருமைச் சகோதரி மதிவதனி அவர்கள் இங்கே உரையாற்றவிருக்கிறார்கள்.

### கூட்டாட்சி தத்துவம்

மாநில சுயாட்சி என்பது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையேயான போராட்டம் அல்ல. இந்தியாவினுடைய அரசியலமைப்புச் சட்டத்தை அண்ணல் அம்பேத்கர் தலைமையில் உருவாக்கிய நம்முடைய அரசியல் அமைப்பு குழுவினர் இது ஒரு கூட்டாட்சி முறை என்றார்கள் (FEDERAL SETUP). மத்திய அரசாங்கம் இயங்குகிறது என்றால், அதனோடு இணைந்து செயல்படக்கூடிய மாநில அரசுகளையும் அது தன்னுடன் இணைத்துப் பயணிக்க வேண்டும். கடிகாரத்தின் முட்களை எடுத்துக் கொண்டால், அதில் இருக்கக்கூடிய ஒவ்வொரு முள்ளும் இன்னொரு முள்ளைச் சார்ந்து இருக்கக்கூடியது. சின்ன முள் இயங்க வேண்டும் என்று சொன்னால், நிமிட முள் சரியாக இயங்க வேண்டும். நிமிட முள் சரியாக இயங்கினால்தான், மணி முள் சரியாக இயங்கும் என்ற வகையில், அந்த இரண்டும் ஒன்றாக இயங்க வேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையிலே உருவாக்கப்பட்டு இருக்கக்கூடியது கூட்டாட்சித் தத்துவம். அதுதான் 'மாநிலத்தில் சுயாட்சி - மத்தியிலே கூட்டாட்சி' எனும் தத்துவம். இதை தெளிவாக இந்திரகுமார் தேரடி அவர்கள் உங்களிடத்திலே விளக்கவிருக்கிறார்கள்

'மாநில சுயாட்சியைப் பற்றிப் பேசுகிறீர்களே, அதை நீங்கள் அடைந்து விடுவீர்களா?' என்று பேரறிஞர் அண்ணாவிடம் கேட்டபோது, அண்ணா 'அது தொலைவில் உள்ள ஒரு இலக்கு' என்று சொன்னார். இன்னும் மாநில சுயாட்சி என்பது நமக்கு 'தொலைவில் உள்ள இலக்காக'த்தான் இருக்கிறது. அதை கைக்கொள்ளும் நாள்தான் உண்மையான கூட்டாட்சித் தத்துவம் இந்தியாவில் மலரும் நாளாக இருக்கும். இக்கருத்துக்களை மிக விரிவாக எடுத்து சொல்வதற்கு இங்கே வந்து இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கெல்லாம் வழிவிட்டு, இவ்வரங்கத்தை ஒரு அறிவு நேர்த்தியாக அமைத்த துணை முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத்திருவிழா குறித்து அ.வெற்றிவேல் என்பவர் முகநூலில் எழுதிய பதிவு:**

'10 அமர்வுகள், 44 பேச்சாளர்கள்- மனைவி சமையலைக் கேலி பண்ணி கிச்சு கிச்சு மூட்டும் நகைச்சுவை பட்டிமன்றப் பேச்சாளர்கள் அல்ல - குறைந்தது 10-15 புத்தகங்களாவது படித்து, திராவிட இயக்க வரலாறு, அதன் போராட்டம், அதன் சாதனைகள் போன்ற குறிப்புகள் எடுத்து வந்து தனித் தனி தலைப்புகளில் உரை வீச்சு என இரு நாட்கள் 'தி.மு.க. 75' கருத்தரங்கம்

அன்றைய தி.மு.க. மாவட்ட மாநாடு, மாநில மாநாடுகளில் இதுபோன்ற வெவ்வேறு தலைப்புகளில் திராவிட இயக்க ஆளுமைகள் உரையாற்றி தமிழர்களை அரசியல்படுத்தியது ஒரு காலம் . அதனை இன்றைய சூழலுக்கு ஏற்ப இன்னும் மேம்படுத்தி, அறிவாற்றல், பேச்சாற்றல் மற்றும் வாதத் திறமையுடைய இளைஞர்களை மேடை ஏற்றி பின் வரிசையில் நின்று தன் கடமையைச் செய்து முதல்வரின் பாராட்டுதலைப் பெற்றுள்ளார் தி.மு.க. இளைஞரணிச் செயலர் உதயநிதி அவர்கள்.'